Judicial Form No.53
(See Rule 43)
DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.24/2023**

**2024-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 9 - வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 9 | தொழில் | - | உதவி ஆய்வாளர் |
| பெயர் | - | பிரபாகரன் | வட்டம் | - | |
| த/பெ | - | சுப்பிரமணியன் | சமயம் | - | |
| கிராமம் | - | கன்னியாகுமாரி | வயது | - | 42 |
| சாதி | - | - | | | |

**<u>26.09.2024</u>**

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 கீழான மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது)**

<u>முதல் விசாரணை:</u>

1. நான் தற்போது பொள்ளாச்சி மேற்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். நான் கடந்த 06.02.2023-ம் தேதி காலை 08.00 மணிக்கு வால்பாறை காவல் நிலைய அலுவலில் இருந்தபோது சபரி கார்த்திக், த/பெ. வெள்ளிங்கிரி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலப்புகாரைப்பெற்று நிலைய குற்ற எண் 20/2023, இ.த.ச சட்டப்பிரிவு, 294(b), 387, 506(ii)இதச r/w 4of TNPHW Act -ன் படி வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **( அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்து வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே காலை 09.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சா ட்சிகள் செல்வராஜ், நசிர் ஆகியோர் முன்னிலையில் சாட்சிகள் அடையாளம் காட்ட சம்பவயிடம் பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தேன். **(அந்த மாதிரிவரைபடம் அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் 09.45 மணிக்கு சம்பவயிடத்தில் இருந்து சம்பவத்தின் போது எதிரி பயன்படுத்திய கைக்குஅடக்கமான கருங்கல் -1 அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **(அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

பின்னர் சம்பவயிட சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் கிடைத்த தகவலின் பேரில் அன்றைய தினமே 10.00 மணிக்கு வால்பாறை புதிய பேருந்து நிலையம் அருகில் வைத்து எதிரியை கைதுசெய்து நிலையம் கொண்டு வந்து பாரா வசம் ஒப்படைத்தேன் பின்னர் சாட்சிகள் சபரி கார்த்திக், நந்தினி, திவ்யா, பிரவீனா, மதன், மணிக்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்து கைப்பற்றிய வழக்கு சொத்தை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். **(அந்த படிவம் 91 (PR.No. 32/2023) அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்பு விசாரணையை முடித்து எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 387, 506(ii)இதச r/w 4of TNPHW Act -ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில் இருந்து குறுக்குவிசாரணை தற்போது இல்லை என்றார்.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.